# IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 513/2017 |
| நாள் | 13.02.2026 |
| பி.சா.1 | சுப்ரமணியன் |
| வயது | 45 |
| ஊர் | கரூர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி ஆனந்தன் என்பவரை எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால், எனக்கு அவரை தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வாதி வி.எஸ். பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போட வரும் போது, அவருடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால், அது தவறு. எனது பிரமாண வாக்குமூலத்தில், நான் வாடகைக்கு லாரி எடுத்து ஓட்டி வருவதாக குறிப்பிட்டிருப்பது முற்றிலும் தவறு என்றால், சரியல்ல. எனக்கும், வாதிக்கும் இடையே எவ்வித அறிமுகமும் இல்லை என்று நான் குறிப்பிட்டிருப்பது முற்றிலும் தவறு என்றால், சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் வாதி வி.எஸ். பெட்ரோல் பங்கில் வேலை பார்த்து வருவதாக நான் குறிப்பிட்டிருப்பது தவறு என்றால், சரியல்ல. எனக்கும், பெட்ரோல் பங்க் உரிமையாளருக்கும் இருந்தபிரச்சனை இவ்வழக்கின் வாதியின் வரவு செலவை எவ்விதத்தில் கட்டுபடுத்தாது என்றால், சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5-ல் வாதி வி.எஸ். பெட்ரோல் பங்கின் உரிமையாளர் போல் நடந்து கொண்டார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ள நபர்கள் வாதியின் நண்பர்கள் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1

கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால், சரியல்ல. வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்று இவ்வழக்கில் குறிப்பாணை தாக்கல் செய்து தெரிந்து கொண்டேன். நான் வாதியிடம் கடனை பெற்றுவிட்டு, அந்த கடன் தொகையை திருப்பி செலுத்துவதை தவிர்க்கும் பொருட்டு இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்,சரியல்ல. வாதிக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.